)

# முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் அவர்களது செயல்முறைகள், சென்னை – 6

**ந.க. எண். 384/ஆ1/2019 நாள் .10.2019**

பொருள் : உடற்கல்வி – 2019–20 ஆம் கல்வியாண்டில் இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டுக் குழுமம் நடத்தும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வண்ணம் – புதிய விளையாட்டுப் போட்டிகளுக்கு தெரிவுப் போட்டிகள் நடத்துதல் – சார்ந்து.

பார்வை : 1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க. எண். 029623/எம்/இ4/2017, நாள் 23.10.2018.
2. பல்வேறு விளையாட்டு சங்கங்கள் கோரிக்கை மனுக்கள்

*****

பார்வை 1–இல் கண்டுள்ள சென்னை – 6, பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களது செயல்முறைகளின்படி 2018–19 ஆம் கல்வியாண்டில் புதிய விளையாட்டுப் போட்டிகளை நடத்திட அளிக்கப்பட்ட அனுமதி மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றியே நடப்பு 2019–20 ஆம் கல்வியாண்டில் புதிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துமாறு, பார்வை 2–இல் கண்டுள்ள பல்வேறு விளையாட்டுச் சங்கங்களிடமிருந்து பெறப்பட்டுள்ள கோரிக்கை மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ள புதிய விளையாட்டுப் போட்டிகளை கீழ்காண் அட்டவணையில் கண்டுள்ளபடி நடத்தப்படவுள்ளது.

| Sl. No. | Discipline | District | Date |
|---|---|---|---|
| 1. | Karate | Erode | 02.11.2019 (G)<br>03.11.2019 (B) |
| 2. | Rugby | Namakkal | 02.11.2019 (G)<br>03.11.2019 (B) |
| 3. | Field Archery | Namakkal | 17.11.2019 |
| 4. | Baseball | Thanjavur | 02.11.2019 |
| 5. | Tug-of-War | Thanjavur | 02.11.2019 |
| 6. | Wu-shu (U-19 B/G) | Thanjavur | 03.11.2019 |
| 7. | Dodgeball | Vellore | 02.11.2019 |
| 8. | Table Soccer | Vellore | 03.11.2019 |
| 9. | Target Ball | Vellore | 03.11.2019 |
| 10. | Kick Boxing | Chennai | 02.11.2019 (G)<br>03.11.2019 (B) |
| 11. | Roll Ball | Chennai | 02.11.2019 (G)<br>03.11.2019 (B) |
| 12. | Mallakhamb | Chennai | 03.11.2019 |
| 13. | Sepak Takara | Kancheepuram | 02.11.2019 |

(த.பா.பா)

| | | | |
|---|---|---|---|
| 14. | Tennis ball Cricket | Kancheepuram | 03.11.2019 |
| 15. | Tennis Volleyball | Kancheepuram | 03.11.2019 |
| 16. | Kurash | Kanyakumarai | 02.11.2019 |

மேலும், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்கண்டுள்ள விளையாட்டுப் போட்டியினை நடத்தி முடிக்குமாறு சார்ந்த மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. தெரிவு செய்யப்பட்ட மாணவ / மாணவியர் தேசிய அளவிலான போட்டிகளுக்கு தனது சொந்த செலவில் செல்லுதல் வேண்டும்.
2. மாநில அளவிலான பொது தெரிவுப் போட்டி மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் தலைமையில் நடைபெற வேண்டும்.
3. தேசிய அளவிலான போட்டிகளின் போது இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டுக் குழுமத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு சான்றிதழ் வழங்கப்படவில்லை எனில் இவ்வலுவலகம் பொறுபேற்காது.
4. இதனால் ஏற்படும் அனைத்து நிகழ்வுகளுக்கும் (சாதக / பாதக) இவ்வலுவலகத்தினை சார்ந்தது அல்ல என்பதனால் தாங்களே முழு பொறுப்பேற்க நேரிடும்.
5. இப்போட்டிகள் சார்பாக புகார்கள் ஏதேனும் பின்னாளில் பெறப்படின் அதற்கு முழு பொறுப்பு தாங்களே ஏற்க நேரிடும்.
6. இப்போட்டிகள் சார்பாக தேசிய போட்டிகளின் பதக்கம் பெறுபவர்கள் பட்டியல் மற்றும் படிவம் – 4 ஆகிய விவரத்தினை சார்ந்த மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் மூலம் இவ்வலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.
7. இப்போட்டிகளை நடத்தி முடித்திட தேவையான வசதிகளையுடைய விளையாட்டுத் திடலினை சார்ந்த சங்கங்களுடன் இணைந்து மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் தேர்வு செய்து அதன் விவரத்தினை அனைத்து மாவட்டத்திலுள்ள பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை மூலம் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், இதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு நகலினை அனுப்பிவைக்குமாறு சார்ந்த மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

எனவே, மேற்கண்டுள்ள நிபந்தனைகளை மாணவர்களிடமும் அவர்களின் பெற்றோர்களிடமும் தெரிவித்து அவர்களின் ஒப்புதலை பெற்றுக் கொண்ட பிறகு போட்டிகளை எந்தவிதமான புகார்களுக்கும் இடமளிக்காத வண்ணம் நடத்தி முடிக்குமாறு சார்ந்த மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முதன்மை உடற்கல்விஆய்வாளர்
சென்னை – 6

பெறுநர்
மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள்
ஈரோடு, நாமக்கல், வேலூர், சென்னை, காஞ்சிபுரம், கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர்

<u>நகல் :-</u>

1. சென்னை–6, பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்படுகிறது.
2. உறுப்பினர்–செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சென்னை–84 (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது).
3. அலுவலக கோப்பிற்கு